DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.304/2019**

**P.W.7**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | பொம்மையசாமி |
| Father Name | : | பழனிச்சாமி |
| VILLAGE | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2024.

(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி ஆஜர் இல்லை. 1 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது மதுரை மாவட்டம் ஆட்கடத்தல் மற்றும் குழந்தைகள் தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.11.2016 ம் தேதி செக்கானூரணி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, **அ.சா.4** சார்பு ஆய்வாளர் திரு.பழனிச்சாமி அவர்கள் செக்கானூரணி காவல் நிலைய குற்ற எண்.141/2016 சட்டப்பிரிவு 9(B) (II)(D) r/w. 5 of Explosive Substance Act மற்றும் உடன் இணைந்த 9 and 5 of Explosive Substance Act, 1905 பிரகாரம் பதிவு செய்த **அ.சா.ஆ.2** முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு கோப்பை **சாட்சி எண்.10** காவல் ஆய்வாளர் ராமநாராயணன் பார்வைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் **அ.சா.1** சுருளிமலை, **சாட்சி எண்.2** சார்பு ஆய்வாளர் பெரியசாமி, **சாட்சி எண்.3** த.சா.1289 கோபாலகிருஷ்ணன், **அ.சா.3** முதல் நிலை பெண் காவலர் 407, மகேஸ்வரி, அனைத்து மகளிர் காவல் நிலையம், மதுரை, **அ.சா.4** பழனிச்சாமி, **அ.சா.5** சார்பு ஆய்வாளர் சிங்கம், **சாட்சி எண்.7** தலைமை காவலர் சுகுமாறன்,

**அ.சா.6** ஆம்ரூஸ் பிரிட்டோ ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு தடய சொத்தினை மாதிரியை **சாட்சி எண்.9** திரு.கிருஷ்ணன், சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் படிவம் –91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்பு தடய சொத்தின் தகவலறிந்து எதிரிகள் மீது சட்டப்பிரிவு 9(B) (I)(B) r/w. 5 of Explosive Substance Act மற்றும் 5 of Explosive Substance Act 1908 பிரகாரம் 10.11.2016ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கையில் வீரசக்தி என்று இரண்டு முறை ஒரே பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் எழுதப்பட்டுள்ள மையும் புகாரில் அ.சா.1னால் கையொப்பம் செய்வதற்கு பயன்படுத்திய மையும் வெவ்வேறு நிறத்தில் உள்ளது என்றால் சரிதான். அது போல் அ.சா.ஆ.1 புகாரில் "இன்று 22.03.2016ம் தேதி சுமார் 12.30 மணிக்கு நாங்கள்" என்ற வரிகள் இடைச்செறுகலாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தன்னுடைய கு,வி.மு.ச 161(3) வாக்குமூலத்தில் வெடிபொருட்களை கொண்டு செல்வதற்கான போக்குவரத்து உரிமம் உள்ளதா என்றும், வெடிபொருட்களை கொண்டு செல்வதற்கான உரிமம் கேட்டோம், அவர்கள் காட்டவில்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அது போல் அ.சா.ஆ.1 புகாரில் அடித்தல் திருத்தல் மற்றும் மேல் எழுத்து காணப்படுகிறது என்றால் சரிதான். அ.சா.1க்கு மேற்படி அடித்தல் திருத்தல் மற்றும் இடைச்செறுகல் பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அது போல் அ.சா.1 முன்னிலையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையில் column–14ல் அ.சா.1னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.சா.1ன் முன்னிலையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாத காரணத்தினால் தான் முதல் தகவல் அறிக்கையில் column–14ல் அ.சா.1னுடைய கையொப்பம் இல்லை

என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பின்னர் புகாரை யார் எழுதினார்கள் என்று நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய விசாரணையில் எந்த சாட்சியும் புகாரை அவர்கள் எழுதியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை. என்னுடைய விசாரணையில் அ.சா.1 காவல் நிலையத்திலிருந்த போது வேறு யாரும் உயர் அதிகாரிகள் இருந்தார்களா என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. சம்பவயிடத்திற்கு அருகில் டீக்கடை, பெட்ரோல் பன்ங், வீடுகள் ஆகியவைகள் உள்ளன என்றால் சரிதான். அந்த இடத்திலுள்ள தனிநபர் சாட்சிகளை சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வெடிபொருட்கள் எவ்வாறு packing செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய விசாரணையில் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் சமயத்தில் 1 மற்றும் 2 எதிரிகள் காவல் நிலையத்தில் இருந்தார்களா என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. தேர்தல் பணியின் போது வாகன சோதனை செய்யும் போது அதனை வீடியோ பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். அது போல் இந்த வழக்கிலும் வீடியோ பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கிலும் வீடியோ பதிவு செய்யப்பட்டது என்றும் அது எதிரிகளுக்கு சாதகமாக இருப்பதால் அது வழக்கிலிருந்து மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் மூன்று காவல் துறையினரும் அ.சா.1 உடன் சேர்ந்து பணியாற்றினார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்தை அ.சா.1 கைப்பற்றினாரா அல்லது காவல் துறையினர் கைப்பற்றினார்களா என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. சாட்சி எண்.2 பெரியசாமியை முதல்நிலை புலன் விசாரணை அதிகாரி ஏன் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவிலல்லை என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. சாட்சி

எண்.2 பெரியசாமி, அ.சா.2 கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களின் வாக்குமூலங்களில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட தேதி, மாதம் மற்றும் வருடம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சி எண்.2, அ.சா.2 கோபாலகிருஷ்ணன் மற்றும், அ.சா.3 மகேஸ்வரி ஆகியோர்கள் தங்களுடைய வாக்குமூலங்களில் 13.30 மணிக்கு வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள், நேரம் 13.30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது போல் அ.சா.4 பழனிச்சாமி அவருடைய கு,வி.மு.ச 161(3) வாக்குமூலத்தில் 13.15 மணிக்கு புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் அ.சா.1 காவல் நிலையத்தில் ஆஜராகவில்லை என்றும், புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அது போல் அ.சா.4 சொன்ன நாள் மற்றும் தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள நேரத்தில் இந்த வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களின் Batch No., தயாரிப்பு தேதி மற்றும் தயாரிப்பாளரின் பெயர் குறித்து எனக்கு தெரியாது. எனவே வழக்கு ஆவணங்கள் எதிலும் அதைப்பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அது போல் வழக்கு சொத்துக்கள் எங்கிருந்து எடுத்து வரப்பட்டு எங்கு வைத்து அழிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அது போல் வழக்கு சொத்துக்கள் எந்த வகை சார்ந்த வெடிபொருட்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வழக்குசொத்துக்கள் கைப்பற்றப்பட்ட பின்னர் Chief controller of Explosive அவர்களுக்கு தகவல் அளித்ததாக வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 1 மற்றும் 2 எதிரிகளை விசாரித்து எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.5 சிங்கம் என்பவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால்

சரிதான். அ.சா.6 ஆம்ரூஸ் பிரிட்டோ தன்னுடைய கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் வழக்கு சொத்துக்களை அழிப்பதற்கு முன்பும் பின்பும் மண் மாதிரிகளை எடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் எந்த வகையை சார்ந்தது என்று வல்லுநருக்கு அனுப்பி அவருடைய கருத்துரையை பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக மாவட்ட ஆட்சியரிடம் சட்ட அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். முதல்நிலை விசாரணை செய்த ராமநாராயணன் அவர்கள் பதிவு செய்த வாக்குமூலங்களில் தேதிகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் 10.11.2016ம் தேதி இறுதி அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்திற்கு இரண்டு வருடம் மூன்று மாதம் காலதாமதமாக அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையானது நீதிமன்றத்தில் 27.02.2019 அன்று தான் பெறப்பட்டதாக முத்திரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான காரணம் குறித்து நான் வழக்கு ஆவணங்களில் எதுவும் சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கை ஒரு நாள் காலதாமதமாக நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்கான காரணம் குறித்து நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. வெடிமருந்துகளை எடுத்து செல்வதற்காக TN 57 AL 3586 என்ற வாகனத்திற்கு வழங்கப்பட்ட உரிமத்தை நான் கைப்பற்றவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வெடிமருந்துகளை எடுத்து செல்வதற்காக மேற்படி வாகனத்திற்கு 31.03.2018ம் தேதி வரை உரிமம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் 2ம் எதிரி உரிமம் பெற்ற நபர் என்று சொன்னால் சரிதான். அது போல் மேற்படி வாகனத்திற்குரிய RE 13 படிவத்தில் ஜெலடின் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் டெட்டனேட்டர்கள் உடன் எடுத்து செல்வதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணத்தில் காணப்படும் மற்றொரு ஆவணமானது TN 57 AA

8235 என்ற வாகனத்திற்குரியதாகும் என்றால் சரிதான். அந்த வாகனமும் வெடிபொருட்களை எடுத்து செல்வதற்கு உரிமம் பெற்ற வாகனம் என்றால் சரிதான். அதில் RE 13 படிவத்தில் டெட்டனேட்டர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு வெடிபொருட்களும் ஒரே வாகனத்தில் ஏற்றிச்செல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கு வெடிமருந்தை கையாள்வதற்குரிய உரிமம் உள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் புள்ளிவிவரத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்த சாட்சியையும் விசாரிக்காமல் சரியாக புலன் விசாரணை செய்யாமல் இந்த வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>**2வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**</u>

1வது எதிரி தரப்பு மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2ம் எதிரி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

<u>**மறு விசாரணை –**</u> இல்லை.